**செ.வெ.எண்-04** **நாள்-01.08.2025**

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு அரசு குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் கீழ், மிசன் வாட்சாலயா (Mission Vatsalya) திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் மாவட்ட ஆட்சித்தலைவரை தலைவராக கொண்டு இயங்கி வரும் குழந்தைகள் உதவி மையம் 1098-ல் மிசன் வாட்சாலயா வழிகாட்டுதல் படி மேற்பார்வையாளர் (Supervisor) தற்காலிக பணியிடத்திற்கு **கல்வி தகுதி**: **இளங்கலையில்** சமூகப்பணி (Social Work) / கணினி அறிவியல் (Computer Sciences) / தகவல் தொழில்நுட்பம் (Information Technology) / சமூகம் சார்ந்த சமூகவியல் (Community Sociology) / சமூக அறிவியல் (Social Sciences) அங்கிகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தில் ஏதேனும் ஒன்றை படித்திருக்க வேண்டும் மேலும் கணினி இயக்குவதில் திறமை வாய்ந்தவராக இருத்தல் வேண்டும். வயது வரம்பு 42 க்குள் இருத்தல் வேண்டும். இப்பணியிடத்திற்கு மதிப்பூதியம் ஒரு மாதத்திற்கு ரூ.21,000/-, மேலும் குழந்தைகள் அவசர உதவி மையத்தில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருக்க கூடிய தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பத்தினை https://ariyalur.nic.in என்ற மாவட்ட இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை 14.08.2025 அன்று மாலை 05.00 மணிக்குள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, இரண்டாவது தளம், அரசு பல்துறை வளாகம், ஜெயங்கொண்டம் சாலை, அரியலூர் - 621704. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் பதவி குறித்த தகவல்களுக்கு மிசன் வாட்சாலயா (Mission Vatsalya) வழிகாட்டுதல் நெறிமுறைகளை பார்த்து தெரிந்து கொள்ள வேண்டுமெனவும், மேலும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் கல்வி சான்றிதழ் நகல்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் மற்றும் காலதாமதமாக வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என **மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பொ.இரத்தினசாமி, இ.ஆ.ப., அவர்கள்** தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**